**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

STC .No. 569/2023

**2024 - ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06–ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின் படி) திருமதி. A.அக்ஸ்சிலியாமேரி M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

**ம.சா.** : 1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : **கருணாநிதி** | **தொழில்** | : |
| **த/பெ.** | : **கந்தசாமி** | **வட்டம்** | : |
| **கிராமம்** | : | **சமயம்** | : |
| **சாதி** | : | **வயது** | : |

**<u>06.02.2024</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாய வேலை செய்து வருகிறேன். பகுதி நேரமாக அடகு கடையில் வேலை செய்து வருகிறேன். நான் வேலை செய்யும் கடை பெயர் என்னவென்றால் சாய்சேத்அடகு கடை ஆகும். எனது வேலை நேரம் என்னவென்றால் மதியம் 02.00 முதல் 06.00 ஆகும். எனக்கு மாத ஊதியம் எவ்வளவு என்றால் ரூ.7,000/–. எதிரி வீட்டிற்கு நான் எப்போதவாது சென்றுள்ளேனா என்றால் 2, 3 முறை சென்றுள்ளேன். எதிரியை தேடி அவரது வீட்டிற்கு சென்றேன் என்றால் கொடுத்த பணத்தை வாங்குவதற்காக போனேன். எதிரி அங்கு இருந்தாரா என்றால் 1 முறை இருந்தார் 2 முறை இல்லை. எதிரி எனது வீட்டிற்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். என்ன காரணத்திற்காக வந்தார் என்றால் எனது அம்மாவின் இறப்பிற்கு வந்தார். எதிரியை எனக்கு தொழில் ரீதியாக தெரியும் என்றால் எதிரி எனக்கு நண்பர். எதிரி என்னிடம் எந்த வகையில் கடன் வாங்கினார் என்றால் ஒருவருடத்தில் திருப்பி தருவதாக கைமாற்று கடன் வாங்கினார். எதிரி எந்த எந்த தேதியில் பணம் வாங்கினார் என புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன் தற்போது ஞாபகம்

இல்லை. புகாரிலும் வாக்குமூலத்திலும் எந்த எந்த தேதியில் எவ்வளவு ரூபாய் கடன் கொடுத்தேன் என்பதை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 6 முறையாக வங்கி கணக்கில் ரூ. 6,50,000/- போட்டுள்ளேன். ரூ. 3,50,000/- கையில் வாங்கி சென்றுள்ளார். ரூ. 3,50,000/- தொகையை எந்த தேதியில் வாங்கினார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. நான் எதிரிக்கு கடனாக கொடுத்த பணத்திற்கு எவ்வளவு வட்டி என்றால் 1 சதவீத வட்டி ஆகும். எதிரிக்கு கொடுத்த பணத்திற்கு ஒரு சதவீத வட்டி என புகாரிலோ, பிரமாணவாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு முதன் முதலாக எப்போது பணம் கடனாக கொடுத்தேன் என்றால் 2021 கடைசி 2022 ஆரம்பத்தில் கொடுத்தேன் தேதி ஞாபகம் இல்லை. எதிரி முறையாக வட்டி செலுத்தினாரா என்றால் வட்டியே கொடுக்கவில்லை. முதல் தடவை வாங்கிய பணத்திற்கே வட்டி முறையாக கொடுக்காத போது 2 வதாக மீண்டும் பணம் கொடுத்திருக்க வாய்ப்பில்லை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்ன ஆவணம் கொடுத்தார் என்றால் ஆரம்பத்தில் ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை பின்னர் செக் எழுதிகொடுத்தார். என்னிடம் காட்டப்படும் காசோலையில் எதிரி கையெழுத்து மட்டும் செய்து கொடுத்தார் நான் விபரங்களை பூர்த்தி செய்தேன் என்றால் சாட்சி ஆமாம் என்று சொல்லிவிட்டு பின்னர் எதிரிதான் பூர்த்தி செய்து கொடுத்தார் என்று சாட்சியம் அளிக்கிறார். எதிரி கடன் வாங்கிய தொகை மற்றும் அதற்குறிய வட்டி பாக்கி ஆகியவற்றை குறித்து குறிப்பிட்டு எதிரிக்கு வாட்சப் மூலம் தகவல் அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். எவ்வளவு என கணக்கிட்டு எதிரி அனுப்ப சொன்னதால் அனுப்பினேன். எதிரியிடம் பணத்தை திரும்ப தர கோரி எப்போது கேட்டேன் என்றால் 18.03.2023-ல் கேட்டேன். எதிரி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகாரின் பேரில் அரியலூர் காவல் நிலையத்தில் 20.03.2023-ல் என்னை விசாரணைக்கு அழைத்தார்களா என்றால் அழைத்தார்கள் நான் ஆஜராகி பதில் அளித்தேன். என்றைய தினம் ஆஜரானேன் என்று ஞாபகம் இல்லை. எதிரி என் மீது என்ன புகார் அளித்திருந்தார் என்றால் புகார் அளித்தார்

கூப்பிட்டு விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும புகார் அங்கு அளித்த புகாரா என்றால் அது இல்லை அது வேறு புகார். எதிரி என்னிடம் கொடுத்த காசோலையை நான் எந்த தேதியில் வங்கியில் செலுத்தினேன் என்றால் 18.03.2022–ல் செலுத்தினேன். காசோலை செலுத்திய தேதி 21.03.2023 என்றால் சரியல்ல. எதிரி காவல் நிலையத்தில் புகார் அளித்த பின்னர் அவசரஅவசரமாக காசோலையை நானே பூர்த்தி செய்து 21.03.2023 அன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கடிதத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை நான்தான் எழுதிகொடுத்தேன். விசாரணை கடிதம் விசாரணை சமயத்தில் புகார்தாரரால் எழுதி காவல் ஆய்வாளருக்கு கொடுக்கப்பட்டது. பொது தகவல் அலுவலர் மூலம் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பதிலாக பெறப்பட்டுள்ளது. **எ.ம.சா.1–ஆக** குறியீடு செய்யப்படுகிறது. எதிரி என்னிடம் வாங்கிய ரூ.8,00,000/–த்தை திரும்ப கொடுத்தவுடன் இந்த வழக்கு காசோலையுடன் மற்றும் 3 காசோலைகள், பாண்டு ஆகியவற்றை திரும்ப ஒப்படைப்பதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள 4 காசோலைகளை எதிரி கடன் வாங்கும்போது கொடுத்தார் என்றால் 3 காசோலைகளை கடன் வாங்கும்போது கொடுத்தார். ஒரு காசோலையை கடனை திரும்ப கேட்டபோது கொடுத்தார். அந்த 3 காசோலைகளும் என்னிடம் நிரப்பப்படாமல் உள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே எதிரியின் காசோலை 3 இருக்கும் சமயத்தில் புதிதாக ஒரு காசோலை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் வழக்கிற்காக காசோலை வழங்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அவரது வங்கி கணக்கிலிருந்து எனது வங்கி கணக்கிற்கு தொகை திரும்ப செலுத்தியுள்ளார் என்றால் இந்த பணத்தை வாங்குவதற்கு முன்னர் செலுத்தியுள்ளார். எப்போது திரும்ப கொடுத்தார் என்ற தேதி ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் உள்ள பாண்டு நிரப்பப்படாத பாண்டு என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் ஒத்துக்கொண்டபடி எதிரி எனக்கு ரூ.8,00,000/– பணம் அசல் தரவேண்டுமா என்றால் அது ஒரு வருடத்திற்கு முன்பு ஆகும். எதிரி என் மீது புகார் அளித்தபின்னர் நான் அவருக்கு பணம் எதுவும்

கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மொபைல் போன் ஸ்கிரின் ஷாட் நான் எதிரிக்கு அனுப்பியது என்றால் சரிதான் அவர் கேட்டுக்கொண்தற்கிணங்க அனுப்பினேன். தொகையை முடிவு செய்து அனுப்புமாறு சொன்னார் நான் அனுப்பினேன். அது **எ.ம.சா.2** ஆகும். எதிரி என்னிடம் கொடுத்த நிரப்பப்படாத காசோலை எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வதுபோல் எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும் எதிரி கொடுத்த புகாரிலிருந்து என்னை பாதுகாத்துக்கொள்ளவும் அதிக வட்டி போட்டு இந்த காசோலையை தாக்கல் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> – இல்லை.

(ஒம்) திரு.M.அறிவு.
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.